உ

“நமோ நாராயணாய நம”

# யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதர்

# திருப் பொற் சுண்ணப் பதிகம்



ஆக்கம்

— பாவாணர் —

டானியல் — தேவமதுரம்

**1998 - 04 - 07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"நமோ நாராயணாய நம"

# யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதர்

# திருப் பொற் சுண்ணப் பதிகம்

யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர்
"கலாநிதி" க. குணராசா
அவர்களுக்கு
நூலாசிரியரின்
மனமுவந்த அன்பளிப்பு
— தா. [illegible]
1998/04/22.

ஆக்கம்

— பாவாணர் —

டானியல் – தேவமதுரம்

**1998 - 04 - 07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

அன்பும் அறிவும் ஒருங்கிணைத்து
அனுதினமும் அதனை எமக்கூட்டி
என்டும் ஈந்தெம் நலங்காத்த
எந்தாய் இராசமணிக்குச் சமர்ப்பணம்.

பாவாணர்

டானியல் தேவமதுரம்

"புஸ்ப வாசம்"
சென் செபத்தியர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

01-03-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் கோண்டாவில் கிழக்கு
# ஸ்ரீ வல்லிபுர நாதர் ஆலய
# வரலாற்றுச் சுருக்கம்

"வல்லி" என்னும் நாமங்கொண்ட அடியார் சுமார் மூன்று நூற்றாண்டுகட்கு முன்பு இந்த ஆலயம் தற்பொழுது அமைந்துள்ள இடத்தில் கல்லுருவம் ஒன்றை வைத்து வழிபாடு செய்து வந்துள்ளார். ஊரவர்களும் வணக்கம் செலுத்தியுள்ளனர். சிறுதெய்வ வழிபாடாகையால் ஆரம்ப நிலையில் ஓலைக் கூரையுள்ள சிறு ஆலயமாக இருந்தது.

ஊர்மக்களின் ஒத்துழைப்பாலும் அமரரான திரு வ. தம்பிப்பிள்ளை என்பவரின் அயராத முயற்சியாலும் கல்லாலான கட்டடக் கையும், ஓட்டாலான கூரையையும் இவ்வாலயம் கொண்டிலங்கத் தொடங்கியது.

மூலவராக அருளாட்சி செய்த நாராயணப் பெருமான் "வல்லியப்பர்" என்ற திருநாமத்தினால் பழிக்கப் பெற்று வந்துள்ளார். இவ்வாலயத்தின் ஆரம்பத்திற்கு வித்திட்ட "வல்லி" என்பவரின் வழித் தோன்றல்களே பூசைக் கைங்கரியங்களை நிறைவேற்றி வந்துள்ளனர். வருடத்தில் ஒருதடவை "வல்லியப்பர்" ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் கிராமப் பிரவேசம் செய்யும் நிகழ்வு பெருவிழாவாக இடம்பெற்றுள்ளதையும் குறிப்பிட வேண்டும்.

1976ம் ஆண்டில் பன்னிருவர் கொண்ட ஆலய பரிபாலன சபை தோன்றியதுடன் வழிபாட்டுக் கலைக்கைப் பொதுக்கோவிலாகவும் ஆக்கியது. இதுவரை "வல்லியப்பர்" என்று வழங்கி வந்த மூலவர் திருநாமம் இதனுடன் தொடர்புடையதாய் "ஸ்ரீ வல்லீபுர நாதர்" என வழிப்படுத்தி அமையலாயிற்று.

"ஸ்ரீ வல்லீபுர நாதர்" திருவருள் துணை கொண்டு 1977ல் கருவறை 1979ல் மகாமண்டபம், 1979 – 1981 வரை கர்ப்பகிருகம், எழுந்தருளி மண்டபம், மூலவர் விக்கிரகம், உற்சவ மூர்த்திகள் இடம்பெற்று 09-02-1981ல் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது. 1982ல் மகாமண்டபம், வசந்தமண்டபம், சுற்றுமதில் என்பவை இடம்பெற்றன. சித்திரத் தேரும் தேர்முட்டி மண்டபமும் 1983ல் அமைக்கப் பெற்றன. 1983ல் ... மணிமண்டபம் ஆலயத்தில் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

கத் தொடங்கியது. 1986ல் பாகசாலை – 1987ல் ஆலயத்துக்கான காரியாலயம், களஞ்சிய அறை என்பன எழுந்தன. 1988ல் ஆலய பூசகர் வாசம் செய்யப் பிரமாலயம் கட்டி முடிக்கப் பெற்றது. ஏராளமான திருப்பணிகள் இடம்பெற்று புனருத்தாரண பிரதிட்டா மகா கும்பாபிசேகம் 05-02-1995ல் இடம்பெற்றது.

இவ்வாலயத்தில் 1987 முதல் அர்ச்சகர்களாக அந்தணர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். தினமும் முக்காலப் பூசைகள் நேரந்தவறாது நிறைவேறி வருகின்றன. இத்துடன் விஷ்ணுவின் அவதாரங்கள் ஏகாதசி, சந்தானகோபாலர் உற்சவம் முதலியனவும் அனந்தசயனர், மகாலக்குமி, நவக்கிரகம், ஆஞ்சநேயர் வருடாந்த சங்காபிசேகமும் இடம் பெறுகிறது. திருப்பாவை, கிருஷ்ண ஜெயந்தி, உறியடி உற்சவம், வைகுந்த ஏகாதசி சிறப்பம்சமாக இடம் பெறுகின்றன. பதினொரு வாகனங்களும், சகடை ஒன்றும் வாகன சேவையில் ஈடுபடுகின்றன.

புரட்டாதி மாதத்தில் இவ்வாலயத்தின் வருடாந்த மஹோற்சவம் பிரதி வருடமும் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனமென ஆஞ்சநேயர் பொங்கலுடன் நிறைவுறுகின்றன.

உற்சவ காலங்களில் பெருந்திரளான பக்தர்கள் அலை மோதுவதை நாம் இங்கு காணக்கூடியதாக உள்ளது. 1997ல் அதாவது கடந்த வருடம் இவ்வாலய முகப்பில் அழகிய வர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய பூதேவி - ஸ்ரீதேவி சமேத வரதராஜாப் பெருமாள் திருக்கோலக் காட்சி சித்திரமாக முன்பக்கச் சுவரில் தீட்டப் பெற்றுள்ளது.

வல்லிபுரநாதர் மீது ஆராத பக்தி பூண்ட அன்பர்கள் பாமாலை பதிகங்கள் முதலியவற்றை யாத்தும் இசைநாடாக்களை வெளியீடு செய்தும் வருகின்றனர்.

1997/1998ம் ஆண்டு ஆலயத் திருப்பணிச் சபையினர் நாளும் பொழுதும் ஏராளமான பல திருப்பணிகளை நிறைவு செய்த வண்ணம் இருக்கின்றனர். காலச் சுழற்சியில் இவ்வாலயம் வளர்ந்தும் வளந்தேங்கியும் இலங்கையில் புகழ் பூத்த ஒரு விஷ்ணு ஆலயமாக ''ஸ்ரீ வல்லிபுர நாதர்'' ஆலயம் திகழ வேண்டுமென்பது கோண்டாவில் கிழக்கு வாழ் மக்களின் பெருவிருப்பாகும்.

எல்லாம் வல்ல எம்பிரான் ''வல்லிபுர நாதர்'' திருவருளால் எமது அனைத்து முயற்சிகளும், நம்பிக்கைகளும் நிறைவேறும் என்ற இதய சுத்தியுடன் நாளும் ''வல்லிபுர நாதர்'' வள நாமம் ஓதிப் பத மலர் பணிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

சிவமயம்
குருபாதம்

யாழ்ப்பாணம் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன
இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிஜீ அவர்கள் அருளிய

# அருளாசியுரை

அருள் ஓங்கும் நெஞ்சத்தீர்

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு, அருள்மிகு வல்லீபுர நாதருக்கு அமைக்கப்பெற்றுள்ள ''திருப்பொற்சுண்ணம்'' என்னும் இப்பதிகம் நூலுருவில் வெளிவருவதையிட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சுண்ணப்பாடல் என்பது மாதர் அழகிய கோலமிட்டு, மஞ்சள் இடித்து இறைவனது பெரும்புகழைப் பாடிப்பாடி இறைவனின் இன்னருளைப் பெறுவது.

சிவபெருமானைக் குறித்து மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் திருப்பொற்சுண்ணப் பதிகம் பாடி இறைவனின் பேரருள் பெற்றுள்ளார். இவ்விதம் திருவாளர் தா. தேவமதுரம் வல்லீபுரநாதருக்குத் திருப்பொற்சுண்ணம் பாடித் திருவருள் பெற முயல்கின்றார்.

இக்கவிஞர் பக்திப் பாமாலைகள் பலவற்றை இதற்கு முன்னரும் வெளியீடு செய்துள்ளார். இவர் இயற்கையாகவே கவித்துவ வல்லமை கைவரப் பெற்றவர்.

வளர்ந்து வரும் ஆலயங்களில் கோண்டாவில் வல்லீபுர நாதர் ஆலயமும் ஒன்றாகத் திகழ்வதையிட்டுப் பெரும் மகிழ்வடைகின்றோம். இவ்வாலயத்தில் இப்''பொற்சுண்ணப் பதிகம்'' நூலுருவில் வெளிவருவது போற்றுதற்குரியது.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

யாழ். நல்லை ஆதீனம்,
இலங்கை.

1998 – 03 – 06

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாணக் காணி கடற்றொழில் அமைச்சின்
மேலதிக உதவிச் செயலாளராகப் பணிபுரிந்த
உயர்திரு. இரா. நாகலிங்கம் அவர்கள்

# அணிந்துரை

ஒரு நாமம் ஒருருவம் இல்லா தார்க்கு ஆயிரம் திரு நாமம் பாடித் தெள்ளேணம் கொட்டுவது பக்தர் பண்பு. மாணிக்கவாசகரின் திருப் பொற் சுண்ணத்தைப் படித்தால் யாமும் இதுபோன்று முயன்றால் என்ன? என்ற ஓர் எண்ணம் எமக்கு எழுவது இயல்பானது.

இந்த வகையிலே ''வல்லீபுரர் பொற் சுண்ணப் பதிகம்'' இங்கு எழுந்துள்ளது. நிதமும் பெற்றோரை மகிழ்விக்கும் குழந்தையின் ஈடு இணையற்ற மழலை இன்பம் போலவே பக்தர்களின் மழலையும் என்ஞான்றும் இறைவனை மகிழ்விக்கின்றது.

எனது அன்புக் குரிய ''பாவாணர்'' திரு. தா. தேவமதுரம் அவர்கள் ''அம்பிகை அந்தாதி வெண்பா'' ''வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் பாமாலை'' போன்ற பக்திப் பனுவல்களால் இறைவனை அர்ச்சித்தவர். இத்திருப்பொற் சுண்ண மலர் கொண்டு இப்பொழுதும் இறைவனை அர்ச்சிக்கின்றார்.

இந்நாட்டில் குறிப்பாகத் தமிழ்மக்களுக்கு நேர்ந்துள்ள மிகவும் வேதனையான இக்காலகட்டத்தில் எமக்கு இறைவனைத் தஞ்சம் அடைவதைத் தவிர வேறு வழியே இல்லை. அவனருளால் அவன் தாள் வணங்குவோம்.

யாழ் கோண்டாவில் கிழக்கு வல்லீபுர நாதர் திருவருள் எம் அனைவரையும் அரவணைத்துக் காப்பதாகுக.

இரா. நாகலிங்கம்
(அன்பு மணி)

18, நல்லையா வீதி,
மட்டக்களப்பு,
இலங்கை.

1998 – 03 – 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லீபுர நாதர்
ஆலயப் பிரதம குருக்களும் சித்தாந்த பண்டிதருமான
பிரம்மஸ்ரீ சி. சிவகணேஷக் குருக்கள் வழங்கிய

# வாழ்த்துரை

யாழ். கோண்டாவில் கிழக்கு ''வல்லீபுர நாதர் பொற்சுண்ணப் பதிகம்'' படித்தேன். பைந்தமிழ் மொழியிற் குழைந்து வரும் சுண்ணப் பாக்கள் பத்தையும் சுவைத்துப் பரவசமுற்றேன். இயல்பாகவே கவிதா சாமர்த்தியம் நிறைந்துள்ள எமது கவிஞர் தா. தேவமதுரம் அவர்களின் கவிதைக் கனிகள் நன்கு கனிந்து இப் பொற்சுண்ணத் திற் கலந்து சுவையூட்டும் பாங்கை உளமார வாழ்த்துகின்றேன்.

எம் பெருமானின் திருநாமங்களும், திரு அவதாரங்களும் இப்பதிகத்தில் பயின்றுவரும் பக்குவம் இப்பதிகத்தைப் படிப்பவரின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளச் செய்யும் என்பது வெறும் புகழ்ச்சியல்ல ''வல்லீபுர நாதர் ஆலயம் பற்றி ஒரே பார்வையில் அறிய விரும்பும் அடியார்க்குப் பயனுள்ள பல தரவுகளைச் சேகரித்து இந் நூலாசிரியர் இப்பதிகத்தில் வெளிக் கொணர்ந்தமையைப் பாராட்டுகின்றோம்.

இங்கு வருடாந்த மஹோற்சவ காலங்களில் ''இப் பொற்சுண்ணப் பதிகம்'' இந்த ஆலயத்தில் ஓதப் பெறும் தகைமையைத் தன்னகத்தே கொண்டிலங்குகின்றமை இதன் சிறப்பு அம்சமாகும்

இக் கவிஞர் நீடுவாழவும் இதுபோன்ற பக்திப் பாமாலைகளை மேலும் வெளிக்கொணரவும் எம்பெருமான் திருவருள் பாலித்திட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ சி. சிவகணேஷ குருக்கள்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
1993 - 03 - 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானின் திருவாக்கு. இதற்கு அமைவாக, அவன் அருளால் அவன் புகழ்பாடும் திருப்பணி கைகூடியமை தங்கள் கரங்களில் நூலுருவாகத் திகழும் ''வல்லீபுரநாதர் திருப்பொற்சுண்ணப் பதிகமாகும்''.

இப்பதிகத்தை ஆசித்து அருள் உரை செய்த யாழ் நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிஜீ அவர்கள் ''மணிவாசகர் திருவாசகத்தில் சிவ பெருமானுக்குத் திருப்பொற்சுண்ணம் பாடிச் சிவனருள் பெற்றமை போன்று கவிஞர் தேவமதுரம் வல்லீபுரநாதருக்குப் பொற்சுண்ணம் பாடித் திருவருள் பெறமுயல்கின்றார்'' என்று ஆசிக்கின்றமையும் ''மாணிக்கவாசகரின் பொற்சுண்ணத்தைப் படித்ததால் ஏற்பட்டுள்ள மன உந்துதலே ''வல்லீபுரநாதர் பொற்சுண்ணம்'' எழுந்தமைக்கான காரணம் எனவும் என்னை இலக்கிய உலகில் உலாவரச் செய்த எனது குருஜீ, ஈழத்துப் பிரபல நாடக, நாவல், சிறுகதை, கட்டுரை எழுத்தாளர் உயர்திரு இரா நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள் உரைக்கின்றமையும் வாழ்த்துரை வழங்கிய வல்லீபுரநாதர் ஆலயப் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ சி. சிவகணேஷ் ஐயா சித்தாந்த பண்டிதர் அவர்கள் இப் பொற்சுண்ணப் பதிகத்தின் தகைமைபற்றி விதந்துரைக்கின்றமையும் அடியேன் இம்மையிற் பெற்ற பெரும் பேறு என்று உணர்கின்றேன். இப்பெரியோர்க்கு எனது நன்றி கலந்த வணக்கம் பலவாகும்.

இச்சுண்ணப் பாடல்களை இனிய இசைவளம் ததும்பும்படி ஒலிப் பதிவுக்கு உதவிய எங்கள் அன்புக்குரிய யாழ். வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ''சங்கீத பூசணம்'' பொன்னாலையூர் திரு. சு. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கட்கு நாம் என்றென்றும் நன்றி உள்ளவர்களாவோம்.

இப்பதிகத்தின் தோற்றுவாய்க்கு ஊற்றுக்கண்ணான அன்பன் வல்லீபுர நாதர் ஆலய ஓதுவார் தம்பி ஆனந்தன் என்றும் என் நன்றிக்குரியர். இந்நூலை வெளியீடு செய்வதற்கு இசைவு தந்த தலைவர் உள்ளிட்ட ஆலய பரிபாலன சபையினர்க்கு எமது நன்றிகள் உரித்தாகுக. இச்சுண்ணப் பதிகத்தைக் கவர்ச்சிகரமாக நூலுருச் செய்து தந்த யாழ். நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தினருக்கு எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக இங்கு வாழ்த்துரை வழங்கிச் சிர் செய்த இந்த ஆலயப் பிரதம குருக்கள் ஐயா பிரம்மஸ்ரீ சி. சிவகணேஷக் குருக்கள் இப் பதிகத்தின் தகைமைபற்றி விதந்துரைத்தமைக்கு அமைவாக மஹோற்சவ காலங்களில் இப்''பொற்சுண்ணப் பதிகம்'' இந்த ஆலயத்தில் ஓதுவார்களால் ஓதப்பெற வேண்டுமென்பது இந்நூலாசிரியனின் தணியாத தாகம்ாகும். இவற்றிற்கு அனுகூலமாகவே ஆலய பரிபாலன சபையினர் தொண்டாற்றுவர் என்பது அடியேனின் அன்பார்ந்த எதிர்பார்ப்பும் ஆகும். என்றும் வல்லிபுரர் திருவருள் துணைபுரிவதாக

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

'புஸ்ப வாசம்'' — அன்பன் —
கோண்டாவில். டானியல் – தேவமதுரம்
1998 – 03 – 21.

நமோ நாராயணாய நம

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு ஸ்ரீ வல்லீபுர நாதர்

# பொற்சுண்ணப் பதிகம்

## - 'வல்லீபுரர்' - காப்பு - வெண்பா -

எண்ணங் குவிந்து எழுந்தசீர்ப் பாமலர்சேர்
வண்ணத் தமிழ்மாலை 'வல்லீபுரர்—சுண்ணத்தைப்'
பண்ணமைய நாவிசைத்துப் பக்தர் பரவிடஎம்
கண்ணன் வல்லீபுரர் காப்பு

## நூல்

1. மஞ்சட் குங்கும மாக்கோலம் இட்டு
மங்கள கும்பம் மகிழ்வுற நாட்டிப்
பஞ்ச தீபமும் தூபமும் காட்டிப்
பண்மிளிர் சுண்ணப் பதிகம் மீட்டி
நெஞ்சம் கோண்டாவில் தலத்தை நண்ணி
நெடுமால் வல்லீபுர நாதரை எண்ணிக்
கஞ்ச மலர்க்கை உலக்கை பற்றிக்
கவிதைப் பொற்சுண்ணம் இடித்து நாமே!

2. நன்மஞ்சள் நிரம்பி நிற்கும் உரலில்
நங்கையர் கரம்நீள் உலக்கை ஏந்த
இன்னிசை வாணர் இசைநன் றிசைக்க
இனிமை எங்கும் சுரந்து ததும்பச்
சென்னியில் மாயோன் சேவடி சேர்ந்து
செங்கண் மலரோன் சீரடி தாழ்ந்து
அன்பரெம் நாரணன் வல்லீபுர நாதர்
அருள்மிகு பொற்சுண்ணம் இடித்து நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3\. அழகுறு மூலவர் அருளொளி விளங்க
அருங்கலை இன்பம் அழகுறத் துலங்க
முழவொடு திருப்பா சுரங்கள் முழங்க
முப்பொழுது அந்தணர் அருமறை ஓங்கப்
பழகிய தமிழ்ப்பா மலர்மாரி பெய்ய
பக்திமை பரந்து பார்மிசை பரவக்
குழலிசைப் பிரிய வல்லிபுர சுவாமிக்
குவந்து பொற்சுண்ணம் இடித்து நாமே!

4\. பச்சை மாமேனியன் அற்புதம் பாடிப்
பள்ளிகொள் அனந்தன் பொதுமை பாடி
அச்சுதன் அருளாசி அன்றாடம் வேண்டி
அனுதினம் ஆயர்தம் குலச்சேதி கூறி
மெச்சு தலப்புகழ் மேன்மையை நாடி
மெய்விரத ஆடிடும் அன்பரைப் பாடி
இச்செகம் போற்றும் வல்லிபுர நாதர்
இசைந்த பொற்சுண்ணம் இடித்து நாமே!

5\. அன்பொழி வீசிநல் அருளொளி துலங்க
அமைதுள பாரம் அரவணைத் திலங்கக்
குன்றுயர் திருவருள் குவிந்து காக்கக்
குவளைத் திருவிழி குளிர்ந்து நோக்கப்
பொன்மகள் பூதேவி புன்னகை பூக்கப்
புரிசமன் நிறைநீதி புவனியிற் பொலிய
இன்புறு கோண்டாவில் வல்லி புரர்க்கு
இதந்தரு பொற்சுண்ணம் இடித்து நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மச்சுரு எடுத்தோன் மாயனைத் தேர்ந்து
மண்டலங் காத்தோன் கூர்மம் ஓர்ந்து
எச்சமில் அரக்கர் இனம் அழித்திட
எழுந்த வராகநல் மூர்த்தம் ஆய்ந்து
அச்சுரு நரசிம்ம வடிவம் வியந்து
அருந்தவ வாமனன் ஆற்றலை அறிந்து
உச்சிமிசை வல்லீபுரர் பாதம் பதிக்க
உளமொன்றிப் பொற்சுண்ணம் இடித்து நாமே!

7. தந்தை மொழி தனைக் காத்த தனையனே
தவநிறை செல்வா! சீரார் பரசுராமா!
தந்திர இராவணன் தலைபறித்த ஸ்ரீராம!
தருக்கன் தேனுகனைத் தகித்த பலராமா!
புந்தியிற் கோகுலர் போற்றுமெம் கிருஷ்ணா!
புரவியில் வாளேந்து கல்கி அவதாரர்
விந்தைமிகு அந்தமில் வல்லீபுர நாதர்
விருப்புயர் பொற்சுண்ணம் இடித்து நாமே!

8. வல்லீபுரர் திருநாமம் ஆர்ப்ப! ஆர்ப்ப!!
வளநாத(ர்) பொற்சுண்ணம் ஆர்ப்ப! ஆர்ப்ப!!
நல்லியலார் மெல்லோசை ஆர்ப்ப! ஆர்ப்ப!
நற்றமிழ் பண்குழைந் தார்ப்ப! ஆர்ப்ப!!
பல்லியம் பதமிகுந் தார்ப்ப! ஆர்ப்ப!!
பசுஞ் சுண்ணமிடிந் தார்ப்ப! ஆர்ப்ப!!
நல்லருளாளர் வல்லீபுர நாதர்
நவயுகப் பொற்சுண்ணம் இடித்து நாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கோண்டாவில் ஊரன்பர் கோகுலனை நாடக்
கோவிந்தன் இன்னருள் குன்றமாய்க் குவிய
மாண்புயர் மதுசூதன் மகிமையைப் பாடி
மாயனை மருவுவோர் மனங்களி கூர
வேண்டுவார் வெங்கடேசப் பெருமானை வேண்ட
வேணுகானன் இசை விண்ணிடை வீங்க
ஆண்டருள் பொழியும் வல்லீபுர நாதரை
ஆராதித்துப் பொற்சுண்ணம் இடித்து நாமே!

10. நிழலெனக் கோபியர் நிறைதனைக் காத்து
நின்வசம் ஈர்த்தனை நிர்மலக் கண்ணா!
மழலையீந் தாயர்தம் வெண்ணெயை வீரா!
மனங்கொண்டு திருடிநீ உண்டனை தீரா!
கழலிணை பரவிக் கவியாரம் சூட்டிடக்
கடலென அருள்புரி கண்ணனெம் மாயன்
அழகமர் "கோண்டாவில் வல்லீபுர நாதர்"
அருள்பெறப் பொற்சுண்ணம் இடித்து நாமே!

## வாழ்த்துச் செய்யுள்

"வல்லீபுரர்" அருள் ஓங்கி வையம் வாழி!
வளமிகு கோண்டாவில் தலமும் வாழி!
"வல்லீபுரர்" நாமம் வானுயர்ந்து வாழி!
வரையாம் அருமறை அந்தணரும் வாழி!
"வல்லீபுரர்" பதம்பணி பக்தர் வாழி!
வற்றாது வண்தமிழ் இவ்வகிலம் வாழி!
"வல்லீபுரர் பொற்சுண்ணப் பதிகம்" வாழி!
வரமருள் வல்லீபுர நாதர்! வாழி! வாழி!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சுப மங்களம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



593, திருவள்ளுவர் அச்சகம் நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org